[1981 பிப்ரவரி 6]

சிவஞானபுரம் அரசு உயர்நிலைப்பள்ளி

*வினா எண் 206—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திக்குளம் தொகுதி சிவஞானபுரம் அரசு உயர் நிலைப்பள்ளியில் விஞ்ஞான ஆய்வுக்கூடக் கட்டிடம் கட்ட அரசு அனுமதி தந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[முற்பகல் 9-20]

திரு. ரா. கு. பெருமாள் : விளாத்திக்குளம் தொகுயியில் ஐம்பதுக்கு மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. அங்குள்ள குழந்தைகள் விஞ்ஞானக் கல்வி பயில ஏறத்தாழ 30 மைல் தூரம் செல்லவேண்டியிருக்கும் காரணத்தாலும், விஞ்ஞானக் கூடம் இல் லாத காரணத்தாலும் அப்பகுதி மக்கள் கல்வித் தரம் குறைவாக இருக்கிறது. ஆகவே, சிவஞானபுரம் அரசு உயர்நிலைப் பள் ளியில் இந்த நிதி ஆண்டில் விஞ்ஞான ஆய்வுக்கூடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தமிழ்நாட்டிலுள்ள 3,218 உயர்நிலைப்பள்ளிகளில் 1,243 உயர்நிலைப்பள்ளிகள் மேல் நிலைப்பள்ளிகளாக மாற்றப்பட்டுள்ளன. இவற்றில் பல பள்ளி களுக்கு ஆய்வுக்கூட வசதி இல்லை. வருஷந்தோறும் 25 பள்ளிக் கூடங்களுக்குத் தனி மானியம் தந்து ஆய்வுக்கூட வசதிகளை ஏற்படுத்தி வருகிறோம். அப்படிப் பார்க்கிறபோது வசதி இல் லாத பள்ளிக்கூடங்களின் தன்மையை ஆராய்ந்து அந்தப் படியாக நாம் இந்த மானியத்தைத் தந்து கொண்டிருக்கிறோம். அது பற்றி ஆராய்கின்ற போது சிவஞானபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியும் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

குத்தாலம் உயர்நிலைப்பள்ளியில் தேசிய மாணவர் படைப்பிரிவு.

*வினா எண் 207—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் குத்தாலம் அரசினர் பள்ளியில் நடைபெற்றுவந்த தேசிய மாணவர்படைப் பயிற்சி இடையில் நிறுத்தப்பட்டது உண்மையா?